# முரசொலி

பக்கங்கள் நான்கு    விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 226    ஆங்கீரச ஆனி 26 (10.07.1992) வெள்ளி


## வீரச்சோலை தமிழர் வீடுகளின் அத்திவார கற்களும் சூறை

அம்பாறையில் வீரச்சோலை எனும் தமிழ் கிராமத்திலுள்ள வீடுகள் அம்பாறை முஸ்லிம்களால் சூறையாடப்பட்டுவருகின்றன. இக்கிராம மக்கள் தற்போது இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வசித்துவருவது தெரிந்ததே தமிழர் வீடுகளை சூறையாடும் முஸ்லிம்கள் தமிழர்களின் வீடுகளின் அத்திவாரக் கற்களையும் கிளறி எடுத்துச் சென்றுள்ளனர். இந்த அடாவடித் தனங்கள் குறித்து வீரச்சோலை தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர் எழுதியதும் அது குறித்து அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இயக்கச்சி நோக்கிய இராணுவ நடவடிக்கை

## ஸ்ரீலங்காவின் அனுமதி மறுப்பு இந்தியா கவலையாம்

புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிற்கு நாடு கடத்தல் தொடர்பாக ஆராய கொழும்பு வர இந்திய மத்திய புலனாய்வுக் குழுவுக்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதி மறுத்துவிட்டது குறித்து இந்தியா கவலையடைந்துள்ளது இவ்வாறு புதிதாக நியமனமான இந்திய வெளியுறவு இணையமைச்சர் ஆர். எல். பாட்டியா நேற்று தெரிவித்தார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் அளித்த பதிலில் ஸ்ரீலங்கா அரசு முன்னர் இந்தியப் புலனாய்வுக் குழுவினர் கொழும்பு வர அனுமதி வழங்கியிருந்தது எனக் குறிப்பிட்டார்.

## ஊரியானில் ஷெல் தாக்குதல் வேலணை வாசி பலி!

ஊரியான் பாதையூடாக கடந்த 7 ஆம் திகதி வந்துகொண்டிருந்தவர்களை நோக்கி படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்ட போது ஒருவர் அகப்பட்டு பலியானார்.

இவரின் சடலம் தேடி எடுக்கப்பட்டு நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்க லொறிச் சாரதியான வேலணை 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுந்தரன் கோபால்(56) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (07)

## ஜூலை மாத வவுச்சர்கள் கிளிநொச்சிக்கு வந்துள்ளன

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஜூலை மாத ஓய்வூதிய வவுச்சர் செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டுள்ளது

தற்போதைய சூழ்நிலையில் இவற்றை யாழ்ப்பாணம் எடுத்துவர முடியாதிருப்பதால் மீண்டும் கொழும்பிற்கு எடுத்து செல்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் நேற்று அவசர செய்தி ஒன்றை கொழும்பிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார். 47

## இந்தோனேஷியாவிற்கும் ஜனாதிபதி செல்லத் திட்டம்

செப்டெம்பர் கடைசி வாரத்திற்கும் ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதி பிரேமதாஸ 6 சார்க் நாடுகளுக்கு பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் ஆறு நாடுகளுக்கான பயணம் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமன் விரக்கோன் நேற்று தெரிவித்தார்.

சார்க்கின் தற்போதைய தலைவர் என்ற ரீதியில் இப்பயணத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி பிரேமதாஸ இந்தோனேஷியாவிற்கும் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் பிரதமன் விரக்கோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி ஏற்ற பின்பு இதுவரை எந்த வெளிநாடுகளுக்கும் பயணமாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்ணெண்ணெய் விற்பதில் இப்படியும் சில மோசடி

மண்ணெண்ணெய் வாங்கித் தருவதாக கூறி மக்களிடமிருந்து மிகத் தந்திரமாக பணம் வசூலிக்கும் கும்பல் யாழ் பட்டணத்தில் நடமாடுவதாக தெரிவிக்கப்படுகிறது

நேற்று யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் வெற்று பையுடன் வந்தவர் மண்ணெண்ணெய் வேண்டுமா என கூறி அவ்விடத்தில் உள்ள ஒருவரிடம் இருந்து சொற்பளவு பணத்தை ஏமாற்றிக் கொண்டு சென்றுள்ளார்.

இதேபோல கோப்பாய் பகுதியிலும் மண்ணெண்ணெய் வாங்கித் தருவதாக கூறி இனந்தெரியாத நபர்கள் மக்களிடம் இருந்து பணத்தை ஏமாற்றி கொண்டு சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 47

★ விமானக்குண்டுவீச்சால்

## துர்க்கையம்மன் ஆலயத்துக்கு 39 லட்சம் ரூபா நட்டம

மே மாதம் 31ஆம் திகதி தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதம் 39 இலட்ச ரூபா என பரிபாலனசபையினரால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

இதன் விபரங்களை பரிபாலன சபையினர் நேற்று யாழ் அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரிடம் ஜனாதிபதிக்கு அனுப்புமுகமாக கையளித்துள்ளனர் 07

## விமானத் தாக்குதலின் உக்கிரம் குறைவு

இயக்கச்சி நோக்கி பலவேகய துருப்புக்கள் நேற்று இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் வாடியடிச் சந்தி, சங்கத்தார் வயல் பகுதிகளிலிருந்து படையினர் இயக்கச்சி நோக்கி செல்லும் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

மூன்று நாள் இடைவெளியின் பின் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை இயக்கச்சி சந்தியை கைப்பற்றும் நோக்கமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இயக்கச்சி நோக்கி செல்ல முற்படும் படையினருக்கு உதவியாக ஆனையிறவு, வெற்றிலைக் கேணி முகாம்களிலிருந்து அகோர ஷெல் தாக்குதல் நீடித்துவருகிறது.

இதனிடையே வழமைக்கு மாறாக நேற்று விமானப் படை விமானங்களும் ஹெலிகளும் மிக உயரத்திலிருந்தே தாக்குதல்களை மேற்கொண்டன,

இதனால் விமானங்களின் குண்டு வீச்சு இலக்கின்றியும் உக்கிரம் குறைந்ததாகவும் இருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது

படையினரை எதிர்த்து புலிகள் தொடர்ந்து கடும் தாக்குதலை நடத்திவருகின்றனர், சேத விபரங்கள் குறித்த மேலதிக விபரங்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை 7,47

## ஹெலிசூடு

நேற்று பிற்பகல் 5.30மணியளவில் இயக்கச்சி பளை, இத்தாவில் ஆகிய இடங்களில் பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் மீது ஹெலிகொப்டர் ஒன்று அகோரமான கவிர் தாக்குதலை நடத்தியது

குண்டுவீச்சு விமானங்களும் மேலே வட்டமிட்டபடியிருந்தன 51

## இரத்தம் தேவை

தற்போதைய சூழ்நிலையில் காயப்பட்டு வருபவர்களைக் காப்பாற்றுவதற்கு இரத்தவங்கிக்கு உடனடியாக இரத்தம் தேவையாக உள்ளது

இதனால் இரத்ததானம் செய்யவிரும்புபவர்கள் யாழ். போதனாவைத்தியசாலை இரத்தவங்கியுடன் தொடர்பு கொள்ளும்படி அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது 07

## ஒக்டோபரில் பட்ஜெட்

ஸ்ரீலங்கா அரசின் 1993 இற்கான பட்ஜெட் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் மீதான உரை நவம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும்,

## விமானச் செட்டைகள் பார்வைக்கு வைக்கப்பட்டன

விடுதலைப் புலிகளால் சென்ற ஞாயிற்றுக்கிழமை சுட்டு விழ்த்தப்பட்ட, வை-8 ரக சீன சகடை விமானத்தின் இரு இறக்கைகளும் மற்றும் விமானத்தின்சிலஉதிரிபாகங்களையும் விடுதலைப் புலிகள் மீட்டெடுத்துள்ளனர்.

இவை நேற்று யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

## வந்தாறுமூலையில் 3 தமிழர்கள் சுட்டுக்கொலை

வந்தாறு மூலையில் கடந்த இரு தினங்களில் மூன்று தமிழ் மக்கள் ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவங்களில் சிறுமி ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்குள்ளாகினர்.

தமிழர்கள் மீதான கொலைகளை தற்போது ஊர்காவற் படையினரும் ஆரம்பித்துள்ளதாக இச்சம்பவங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

## கப்பலில் வந்த தபால்கள் இன்று முதல் விநியோகம்

கப்பலில் இருந்து இறக்கி நேற்று கொண்டு வரப்பட்ட தபால் பொதிகள் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோக சேவைகள் இடம் பெறும் என யாழ். தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்ற போதிலும் மக்களின் நன்மை கருதி தபால் சேவைகள் வழமை போல்நடைபெற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை வழமைக்கு அதிகமாக தபால்கள் வந்துள்ளதாகவும் பொதுமக்கள் வீணாக பிரதம தபாலகத்துக்கு வந்து தபால் ஊழியர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்த வேண்டாம் எனவும் எக்காரணம் கொண்டும் தபாலகத்தில் வைத்து தபால்கள் விநியோகிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## புலனாய்வுக் குழுவுக்கு அனுமதி மறுப்பு இந்திய - ஸ்ரீலங்கா அமைச்சர்கள் பேச்சு

இந்திய மத்திய புலனாய்வுக் குழு புலிகளின் தலைவர்களை நாடுகடத்தும் விடயம் தொடர்பாக விசாரணைகளைமேற்கொள்ளகொழும்பு வருவதற்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதி மறுத்தது குறித்து நேற்று இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் பேச்சுக்கள் நடத்தினர்.

சார்க் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்பு வந்த இந்திய வெளியுறவு இணையமைச்சர் எட்வேர்டோ ஃபெலேரோ நேற்று ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத்துடன் பேச்சுக்கள் நடத்தினார்.

இந்திய புலனாய்வுக் குழு வர அனுமதி மறுத்தமை தொடர்பான ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாட்டை ஹேரத் விளக்கிக் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடுகடத்தல் தொடர்பான விவகாரம் ஸ்ரீலங்கா சட்டத்திற்கு உட்பட்ட ரீதியில் ஆராயப்பட்டு முடிவு செய்யப்படும் விடயம் என அப்போது ஹேரத் குறிப்பிட்டார் எனினும் ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைகளுக்கு ஸ்ரீலங்கா அரச தரப்பில் ஆதரவு வழங்கப்படுவதையும் அமைச்சர் ஹேரத் இந்திய வெளியுறவு துணையமைச்சருக்கு சுட்டிக்காட்டினார்.

★ காவல்துறைப் பொறுப்பாளர் அறிவிப்பு

# சூதாட்டத்திற்குத் தடை; மீறுவோருக்குத் தண்டனை!

தமிழீழத்தில் சூதாட்டங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

எமது தாயக மண்ணை மீட்பதற்காக உக்கிரமான போராட்டம் நடைபெற்று வரும் இவ்வேளையில் மக்களுக்கு பாரிய தீங்குகள் விளைவிக்கும் சூதாட்டங்களை தமிழீழ காவல்துறையினர் தடைசெய்துள்ளனர்.

சூதாட்டத்தால் சூதாட்டம் ஆடுபவர்கள் மட்டுமல்ல அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் பொருளாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிப்பிற்குள்ளாவார்கள் என்பதை சூதாடுபவர்கள் மனதிற் கொள்ள வேண்டும்.

எனவே சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பர்.

இவ்வாறு தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளர் பா. நடேசன் அறிவித்துள்ளார். (9)

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இன்னமும் இல்லை

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற 1990 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதர விசேட பரீட்சையில் பழைய பாடத்திட்ட வினாத்தாளுக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் இதுவரை இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

இப் பரீட்சைக்கு தோற்றிய புதிய பாடத்திட்டப் பரீட்சார்த்திகளுக்கும், பழைய திட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கும் உரிய பெறுபேறுகள் கடந்த இரு மாதங்களுக்கு முன்னரேயே வெளியிடப்பட்டு விட்டன.

இது குறித்து பழைய பாடத்திட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ். கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டபோது பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதாகவும், அங்கு கடிதம் எழுதியும் இதுவரை பலன் கிட்டவில்லையெனவும் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் நேற்று முரசொலிக்குத் தெரிவித்தனர்.

# வர்த்தக ஊழியர்களுக்கு மீளளிப்புக் கடன்

யாழ் வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயற்பாடுகளில் பங்கெடுக்கும் ஊழியர்களுக்கு சலுகைகளில் முன்னுரிமை வழங்கும் திட்டத்தை யாழ் வர்த்தக ஊழியர் சங்கம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத் திட்டத்தின் கீழ் இரு அங்கத்தவர்களுக்கு மீளளிப்புக் கடனாக ரூபா 3000/= வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வர்த்தக ஊழியர்களின் நன்மை கருதி வைத்திய சேவை ஒன்றும் வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தினரால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் ஊழியர்களின் அறிவை வளர்க்கும் நோக்குடன் இச் சங்கத்தினால் வர்த்தக ஊழியர் சங்க நூலகம் பிரிவும் செயற்பட ஆரம்பித்துள்ளது. (15)

# கனிஷ்ட ஊழியர்களை பதவியுயர்த்துவதற்கான பரீட்சை

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் கனிஷ்ட ஊழியர்களைப்பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

லிகிதர் தரம் II பிரிவு 'ஆ', தமிழ்த் தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் கனிஷ்ட ஊழியர்களிலிருந்து நிரப்பப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்திலுள்ள சிற்றூழியர்களில் தகைமையுள்ளவர்கள் இப்பதவியுயர்வுக்கான பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறும், மேலதிக விபரங்களுக்கு 26.6.92 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்வையிடுமாறும் யாழ். செயலக பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். 14

## ஈராண்டு நினைவலைகள்

மலர்வு: 15 — 11 — 1922



உதிர்வு: 10 — 7 — 1990

கர்த்தர் என் வெளிச்சம், யாருக்கு அஞ்சுவேன்

திரு. சாமுவேல்

அன்புத் தெய்வமே அப்பா
எம்மை பாசத்தில் வளர்த்தீர்கள்
இப்போ எம் நெஞ்சில் கவலையை
வளர்த்து விட்டு சென்று விட்டீர்களே.

அரசன் தோட்டம்,
மிருசுவில்.

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

07018

★ அமைச்சர் தொண்டா அறிவிப்பு

# உரிமைகள் பறிபோகும் நிலைவந்தால் அதைத் தடுக்கப் போராடுவோம்!

மலையக மக்கள் பல வருடப் போராட்டத்தின் பின் வென்றெடுத்த உரிமைகள் மீண்டும் பறிபோகும் நிலை வந்தால் அதை தடுத்து நிறுத்தி உரிமைகளை நிலைநாட்டுவதற்காக போராட்டம் நடத்த இ.தொ.கா. தயங்கப்போவதில்லையென இ.தொ.கா.வின் தலைவரும் அமைச்சருமான செள. தொண்டமான் அறிவித்துள்ளார்.

இலங்கையில் பெரும்பான்மைக் கட்சியொன்று உறுதியான ஆட்சியமைக்கவோ அல்லது ஜனாதிபதியொருவர் தெரிவாவதற்கோ இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமையும் மிக முக்கியமானதொன்று என்ற நிலை தற்பொழுது இருந்து வருகிறது.

இந்த நிலையில் தற்பொழுது மீளமைக்கப்படும் தேர்தல் இடாப்புகளில் மலையக மக்கள் தமது பெயர்களையும் தவறாது பதிந்துகொள்ள வேண்டுமென இ.தொ.காவும் மற்றும் மலையக அமைப்புகளும் வற்புறுத்தி வருகின்றன.

ஆனால் இக்கோரிக்கைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் ஏற்கனவே இம்மக்களுக்கு வழங்கப்பட்ட சில நியாயபூர்வமான உரிமைகளையும் புறக்கணிக்கும் வகையில் தேர்தல் திணைக்கள உயரதிகாரிகளும் மற்றும் இல திணைக்களங்களும் செயற்பட்டு வருவதன் எதிரொலியாகவே அமைச்சர் தொண்டமானின் இவ் எச்சரிக்கை அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# போர் முடிந்ததுமே புனர் வாழ்வாம்

"போர் முடிந்ததும் புனர் வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்".

இவ்வாறு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் புனர்வாழ்வுத் துறை அமைச்சர் பி. தயாரத்ன தெரிவித்தார்.

# வறிய மக்களுக்கு உதவ சமூகமேம்பாட்டுக்கழகம் உதயம்

வறிய மக்களுக்கு வீடமைத்துக் கொடுப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும், யாழ். மாநகர சபையும் இணைந்து சமூக மேம்பாட்டுக் கழகத்தை உருவாக்கியுள்ளன.

சகல வட்டாரங்களிலுமுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இக்கழகம் வீடமைப்பு நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களைத் தெரிவு செய்யுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (14)

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கு தொடர்ந்தும் பயிற்சி

பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களின் பயிற்சி வகுப்புகள் யாழ் இந்துக்கல்லூரியில் சனி ஞாயிறு தினங்களில் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக யாழ் மாவட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவிக்கிறார்.

இப்பயிற்சி வகுப்புகளில் வரலாறு, சமூக விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படுவதாகவும் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் பரீட்சை முடிவுற்றபின்னரும் இவ்வகுப்புகள் தொடர்ந்தும் நடைபெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் சுமார் 150 பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் கற்பித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 15

## சண்டிலிப்பாயில ஏற்பாடு

நயினாதீவு நாகபூசணி அம்மன் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் தேவஸ்தானத்தில் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையிலிருந்து தினமும் முற்பகல் 9.30 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் அம்பாள் உள் வீதி உலா வருதலும் நடைபெற்று வருகின்றது. 15 ஆம் நாளாகிய எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வருடாந்த பொங்கல் உற்சவம் நடைபெறும். 50

## யாழ். பிரிவு போட்டிகள்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதற் போட்டியில் குருநகர் விளையாட்டுக்கழக நீல அணி நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியை பெனால்டி உதை மூலம் கிடைத்த மேலதிக ஒரு கோலினால் வெற்றியீட்டியது.

மற்றொரு ஆட்டத்தில் குருநகர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. (16)

# அதி உயரத்தில் பறந்தபடி தளபதிகள் பார்வையிட்டனராம்

இயக்கச்சிப் பகுதியில் இலங்கை விமானப்படையின் வை-8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தை இராணுவ, கடற்படைத் தளபதிகள் பார்வையிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலே அதி உயரத்தில் பறந்த விமானப்படையின் மற்றொரு விமானத்திலிருந்து தளபதிகள் வை-8 இன் சிதைவுகள் வீழ்ந்த பகுதிகளை அவதானித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் இலக்கிய கர்த்தாக்களும் விழாக்களில் பங்குபற்றுவர்

கல்வி உயர்கல்வி அமைச்சினால் பாடசாலைகள் தோறும் செப்டம்பர் 11 ஆம் திகதி நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தமிழ் இலக்கிய தின விழா நிகழ்ச்சிகளின் போது பாடசாலைச் சமூகத்தில் பிரபல்யம் பெற்றுள்ள உள்ளூர் இலக்கிய கர்த்தாக்களையும் அழைத்து விழாவினைச் சிறப்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளுக்குரிய விடயத் தெரிவுகளைத் தெரிவு செய்யும்போது திருவள்ளுவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், உமறுப்புலவர், ஔவையார், நாவலியூர் சோமசுந்தரப் புலவர், அருள்வாக்கி அப்துல் காதிறுப்புலவர், வீரமாமுனிவர், கம்பர், பண்டிதர் எச். ஏ. கிருஷ்ணபிள்ளை, வண்ணக்களஞ்சியப் புலவர் ஆகியோர் பற்றியும் அவர்களது படைப்புகள் பற்றியும் மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, பட்டிமன்றம் ஆகியவற்றை நடாத்துமாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார். 15

# இலங்கைப் படைதாக்கிய தமிழக மீனவருக்கு உதவி

ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு பாதிப்புற்ற ராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்கு உதவி வழங்கப்படுமென தமிழக மீன்வளத்துறை அமைச்சர் கே. ஜெயக்குமார் உறுதியளித்துள்ளார்.

இம்மீனவர்களுக்கு இறால் வளர்ப்புக்கென காணி வழங்கப்படும் என அவர் சொன்னார்.

# வேத ஆகம ஆராய்ச்சி நிலையம் தஞ்சையில் அமையும்

தமிழ்நாடு அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டிருக்கும் வேத ஆகம ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்கான இடமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாக வாரியத்தின் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

சிறுவிளம்பரம்

யந்திரம்

சகல தெய்வங்களுக்குரிய யந்திரங்களும் வியாபார வசியம் செல்வச் செழிப்பு கண்ணூறு நாவூறு போன்றவற்றிற்குரிய எல்லா விதமான யந்திரங்களும் எம்மிடம் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 96 கோவில் வீதி (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். 07020

## சதாம் ஹூசையினுக்கெதிரான புரட்சிச் சதி தோல்வி

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசையின் அரசுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சதிப் புரட்சியொன்றிலிருந்து தப்பித்துக்கொண்டார் என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்ற மாதக் கடைசியில் நடைபெற்றதாகக் கூறப்பட்ட இச் சதிப் புரட்சியின் பின்னணியில் அமெரிக்காவின் கைவண்ணம் இருந்ததாகச் சந்தேகிக்கப் படுவதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சங்கர் தயாள் சர்மாவுக்கு அ.தி.மு. கவும் ஆதரவு

இந்திய ஜனாதிபதி தேர்தலில் திரா காங்கிரஸ் வேட்பாளரான டாக்டர் சங்கர் தயாள் சர்மாவுக்கு அ.தி.மு.க ஆதரவளிக்கும்.

ஆதரவு கோரிப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கடந்த புதன்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது தாம் ஆதரவு தருவதாக உறுதியளித்ததாகவும் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்.

## இந்திய ரயில் விபத்தில் 15 பேர் பலி!

இந்தியா - நாக்பூரில் நேற்று நிகழ்ந்த பயங்கர ரயில் விபத்து ஒன்றில் 15 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

இந்த எக்ஸ்பிரஸ் ரயில் தடம்புரண்டதால் இவ்விபத்து நிகழ்ந்தது.

## தனிநாடாக்கக் கோரி ஆர்மேனியாவில் ஆர்ப்பாட்டம்

அசர்பைஜானுக்கும், ஆர்மேனியாவுக்கும் பிரச்சினையாக இருந்து வரும் நாகோர்னோ கராபாக்குப் பகுதியை ஆர்மேனியா தனி நாடென அங்கீகாரம் அளிக்க வேண்டும் எனக் கோரி ஆர்மேனியத் தலைநகரில் நேற்று முன்தினம் பத்தாயிரம் பேர் கூடிய பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர்

இவ்வார்ப்பாட்டத்திற்கு ஆர்மேனிய எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

இக் கராபாக்குப் பகுதியில் வாழும் பெரும்பாலான மக்கள் ஆர்மேனியர்கள் என்றபோதிலும் புவியியல் ரீதியாக இவ்விடம் அசர்பைஜானுக்குள் உள்ளது.

இதன் எதிரொலியாக அங்கு சர்ச்சை எழுந்துள்ளது.

## ஆப்கான் போராளிகள் காஷ்மீருள் ஊடுருவலாமென அச்சம்

இந்தியா தனது காஷ்மீர் எல்லையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தியுள்ளது

ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய மத அடிப்படைவாதப் போராளிகளின் கையில் வந்துள்ளதனால் இந்தப் போராளிகள் பாகிஸ்தானின் துணையுடன் இந்திய காஷ்மீருள் ஊடுருவி இந்திய இராணுவத்திற்கு எதிராகப் போரிடும் வரும் காஷ்மீர் முஸ்லிம் போராளிகளுடன் இணைந்து கொள்ளலாமென அஞ்சப்படுவதால் இந்தியா தனது எல்லையில் படையினரின் தொகையை அதிகரித்திருப்பதோடு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் என். எம். ஜேக்கப் கூறியுள்ளார்.

## வேலைநிறுத்த அழைப்பை அடுத்து நேபாளிய மாநாடு ஒத்திவைப்பு

மேற்கு வங்காளத்தில் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி(ஜி.என்.எல்.எவ்) அமைப்பு விடுத்திருக்கும் 72 மணித்தியால வேலை நிறுத்த அழைப்பு ஒன்றை முன்னிட்டு மேற்கு வங்காள அரசாங்கம் டார்ஜிலிங்கில் எதிர்வரும் சனிக்கிழமை நடத்த உத்தேசித்திருந்த நேபாளிய மொழி மாநாட்டை ஒத்தி வைத்துள்ளது

மேற்கு வங்காளம் மற்றும் சிக்கிமின் முதலமைச்சர்கள் பிரதம மந்திரியோடு நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மாநில அரசின் செய்தி, தகவல் துறை அமைச்சர் கல்கத்தாவில் தெரிவித்தார்.

## 16 ஆவது உலகக்கிண்ணப் போட்டி பிரான்ஸில் நடைபெறும்

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டி 1994 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெறவுள்ளது தெரிந்ததே. அதே வேளை 1998 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 16 ஆவது உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டி பிரான்சில் நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

16 ஆவது உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை ஆபிரிக்க நாடான மொறக்கோவில் நடத்துவதற்கு ஆபிரிக்கா விண்ணப்பித்திருந்ததுடன் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும் செய்ய 1992 ஆம் ஆண்டு முற்பகுதியிலேயே ஆரம்பித்துவிட்டது.

ஆனால் சமீபத்தில் பிரான்சில் நடைபெற்ற எவ் ஐ எவ் ஏ போட்டிக்குழுக் கூட்டத்தில், இப் போட்டியை நடத்துவதற்கு ஆபிரிக்கா, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் விண்ணப்பித்திருந்தமையினால் இவ் விடயம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

பிரான்ஸிற்கு சாதகமாக 12 வாக்குகளும், ஆபிரிக்காவிற்கு சாதகமாக 7 வாக்குகளும் கிடைத்தமையினால் 16 ஆவது போட்டியை பிரான்ஸில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. (16)

★ விசாரணைக்கு கோருகிறது பி.ஜே.பி.

## 'றோ'விற்கு ஒதுக்கப்படும் நிதியில் துஷ்பிரயோகம்!

இந்திய உளவுப் படையான 'றோ'விற்கு ஒதுக்கப்படும் நிதி றோ உயரதிகாரிகளினால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக இந்திய அரசுக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசு றோவின் செயற்பாடுகளுக்காக வருடா வருடம் பெருமளவு நிதியை ஒதுக்கி வருகிறது.

இந்த மோசடி நடவடிக்கையை அம்பலப்படுத்துவதற்காக, றோவின் கணக்கு விவரங்களை மேற்பார்வை செய்ய ஒரு பாராளுமன்றக் குழுவை நியமிக்க வேண்டுமென இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது

றோவின் நடவடிக்கைகள் குறித்து இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் சந்தேகங்கள் இலம்பியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இரு இலங்கையர் நீலகிரியில் கைது

தமிழகம் நீலகிரியில் வைத்து இரு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

இவர்கள் இருவரும் திருச்சி-துறையூர் அகதிமுகாமிலிருந்து தப்பிச் சென்றவர்களெனவும் இவர்கள் வசம் துப்பாக்கிகளும் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விசர்நாய்க் கடிக்கு குடும்பஸ்தர் பலி

மணியம் தோட்டம் 12 ஆம் குறிச்சியைச் சேர்ந்த ஜெயராசா பெனடிக்ற் என்ற 36 வயது குடும்பஸ்தர் கடந்த ஞாயிற்றுக் கிழமை விசர் நாய்க்கடியினால் மரணமானார்

நான்கு மாதங்களுக்கு முன்பு எங்கிருந்தோ வந்த விசர் நாய் இவரையும் இவரது இரு பிள்ளைகளையும் மணியம் தோட்டத்தில் உள்ள இவரது இடத்தில் வைத்து கடித்தது. இவர் தனது பிள்ளைகளுக்கு விசர் நாய் கடித்தால் போடும் ஊசியை போட்டுக் கொண்டார். ஆனால் தனக்கு ஊசி போட்டுக் கொள்ளவில்லை. கடிகாயம் பெரிதாய் இல்லாததினால் கை மருந்தைப் போட்டே காயத்தை மாற்றிக் கொண்டார் என்று மரண விசாரணையின் பொழுது தெரிவிக்கப்பட்டது. 16

## இந்திய வீரர்கள் மருத்துவ பரிசோதனையில்

பார்சிலோனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்திய விளையாட்டு வீரர்களின் சிறுநீர்கள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

இவர்கள் போதைப்பொருள் பாவனையுடையவர்களா என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டே இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சர் குழு மட்டக்களப்பு செல்கிறது

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரட்ன எதிர்வரும் 18 ஆம் திகதி தனது அமைச்சு அதிகாரிகளுடன் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மாவட்ட, மாகாண சபை அதிகாரிகளுடன் அமைச்சர் குழு அங்கு கலந்துரையாடும்.

## மணவாளக்கோல உற்சவம்

வடலியடைப்பு துர்க்கை அம்மன் புலம் பசுதாள வைரவர் கோயில் வருடாந்த மணவாளக் கோல உற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. 50

## சுயவேலை வாய்ப்புக்கு இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு

சுய வேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக யாழ் மாநகர சபை 2 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

சனசமூக நிலையங்களுக்கூடாகத் தொழிற் துறைத் திட்டங்களை மேற்கொண்டு சுயவேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் சனசமூக நிலையங்களுக்கு 5000 ரூபா வீதம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. 14

## வட-கிழக்கின் சில பகுதிகளில் ஜனசக்தித்திட்டம் மீள ஆரம்பம்

வடக்கு கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் ஜனசக்தி நம்பிக்கை நிதிய வேலைகள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ஜனசக்தி கொடுப்பனவுகளும், திட்டங்களும் கடந்த சில வருடங்களாக வடக்கு கிழக்குப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

மட்டக்களப்பு, மன்னார்த் தீவு, குடாநாட்டுத்தீவு பகுதிகளிலேயே இப்பணி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ரஜமகா விகாரை காணியில் சட்டவிரோத மது!

பிரசித்திபெற்ற தம்புள்ள ரஜமகா விகாரைக்கு அருகில், விகாரைக் காணியில் அமைந்திருந்த உணவு விடுதிகள் சில பொலிஸாரினால் அண்மையில் முற்றுகையிடப்பட்டன.

விகாரைக்கு அருகில் அமைந்துள்ள இந்த விடுதிகளில் சட்டவிரோதமாக மது விற்பனை செய்யப்பட்டு வந்தமையே இந்த முற்றுகைக்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## 'ஹோட்டல் அமைப்பு எதிர்ப்பிரசாரம் அரசுக்கு எதிரான சதியே'

உத்தேச கந்தளம ஹோட்டல் திட்டம் கலாசாரம், மதம், அல்லது அப்பகுதி மக்களின் வாழ்க்கை முறைக்கு அச்சுறுத்தலாக இருக்காது என இந்திய சாஞ்சி விகாரையின் பிரதம தேரோ தெரிவித்துள்ளார்.

அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துவதற்காகவே சில அரசியல் வாதிகள் இத்திட்டத்தைப் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் அமைப்பு எதிர்ப்பிரசாரம் அரசுக்கு எதிரான அரசியல் சதியே எனவும் அவர் தெரிவித்தார்.

## ஸ்தல விசாரணையே அவசியமென வலியுறுத்து

"சம்பவம் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தை நேரில் பார்வையிட வேண்டும். சம்பந்தப்பட்டவர்களையும், பாதிப்படைந்தவர்களையும் விசாரணைக்கு அழைக்கவேண்டும் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு விசேட உதவி கிடைக்க வழி செய்யவேண்டும்".

இவ்வாறு மற்றாசப்பளை அம்மன் கோவில் நிர்வாக சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

"உண்மை நிலையைப் புரிந்துகொண்டு தத்தம் சக்திக்கேற்றவாறு நீதியும், நியாயமும் கிடைக்க எல்லா வகையிலும் உதவுமாறு எல்லாச் சமய ஸ்தாபனங்களையும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களையும், அரசியல் தலைவர்களையும், வெளிநாட்டுச் சர்வதேச ஸ்தாபனங்களையும் இச்சபை அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சமூக அபிவிருத்தி பயிற்சி தமிழிலும் நடைபெறும்

இலங்கை சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தில் அடுத்த வருடம் முதல் தமிழ் மொழி மூலமும் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் இராஜாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தமிழ்ப் பாடநெறியை ஆரம்பிப்பதற்காக 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

1993 ஆம் ஆண்டு முதல் சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தில் பட்டப்படிப்புக்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

★ பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்

## போட்டிப் பரீட்சை 12 ஆம் திகதி நடைபெறும்

திட்டமிட்டபடி பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று யாழ் கல்விப்பணி பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் பருத்தித்துறைக்கு வந்த குமண கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நேற்று யாழ் கல்வித்திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த போட்டிப்பரீட்சை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் மட்டுமே நடைபெறும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 47

## திருமலை செல்லும் குமண மா ஏற்றிவர ஏற்பாடு

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் குமண கப்பல் பொருள்கள் இறக்கி முடிந்ததும் இம்மாதம் 15 ஆம் திகதி திருமலை சென்று மா ஏற்றி வரவுள்ளதாகத் தெரிய வருகிறது.

மா ஏற்றிவந்த பின்பு கொழும்பில் சிகிச்சை பெறுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளை ஏற்றிக் கொண்டு கொழும்பு செல்லவிருப்பதாகத் தெரிகிறது. 7, 47

## வெளியூர்த் தபால்கள் கப்பலில் செல்லும்

யாழ் குடாநாட்டுத் தபாலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தபால்கள் யாழ். பிரதம தபாலகத்தினரால் கொழும்பு செல்லவிருக்கும் குமண கப்பலில் அனுப்பி வைப்பதற்காக நேற்று பருத்தித்துறைக்கு கொண்டுபோய் சேர்க்கப்பட்டுள்ளன.

இக்கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி திருகோணமலைக்கு செல்லும்போது இந்தபார்சல்களும் எடுத்துச் செல்லப்படும் எனவும் தெரிய வருகிறது. 06

★ பாராளுமன்றத்தில் அமைச்சர்

## வடக்கு கிழக்குப்பகுதி புறக்கணிக்கப்படவில்லை

வடக்கு கிழக்குப் பகுதிகளை அரசு புறக்கணிக்கவில்லை என வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

வவுனியா, திருகோணமலை பகுதிகளில் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் நீண்ணை சீரானதும் அரசு அங்கு தனது கவனத்தைச் செலுத்தும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

## ஆரம்ப ஆசிரியர் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது

ஆரம்ப ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை நாளை நடைபெறும் என யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை யாழ் கல்வித்திணைக்களத்தில் வந்துபெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிப் பரீட்சைக்கென யாழ் மாவட்டம் பூராகவும் 41 பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை பொது அறிவும் 10.15 மணி தொடக்கம் 11.15 மணி வரை உளச்சார்வும் பரீட்சைகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 47, 25

## சிறுவன் உட்பட ஐவர் விசர்நாய் கடித்து மரணம்

கடந்த பத்து நாள்களில் விசர் நாய்க் கடியினால் ஐவர் குடாநாட்டில் மரணமடைந்துள்ளனர்.

யாழ் போதனா வைத்தியசாலையில் 10 நாள்களில் நால்வர் மரணமடைந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 6 ஆம் திகதி விசர் நாய்க் கடிக்குள்ளாகி உரிய முறையில் தடுப்பூசி மருந்தினைச் செலுத்தத்தவறியதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். மவுன்கார்மல் வீதியைச் சேர்ந்த பெனடிக் பகிதியான் (8) என்ற சிறுவனே மரணமாகியுள்ளார். 07

## விளையாட்டு அபிவிருத்திக்கு 55 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

யாழ். மாநகரப் பகுதியில் விளையாட்டு அபிவிருத்திக்கென 55,000 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும், விளையாட்டுக் கழகங்களை ஊக்குவிக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

விளையாட்டுக் கழகங்களும், சனசமூக நிலையங்களின் கீழியங்கும் விளையாட்டுக் கழகங்களும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (14)

★ பௌத்த காங்கிரஸ் தலைமை

## அத்துலத் முதலிக்கு சாதகமாக விதிகளில் மாற்றமில்லை

லலித் அத்துலத் முதலி அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைமைப் பதவியை கைப்பற்ற முயல்வதாகவும் அதற்காக அந்த அமைப்பிலிருக்கும் தமது ஆதரவாளர்கள் மூலம் அமைப்பின் விதிகளை மாற்ற முயல்வதாகவும் வெளிவந்த செய்திகளை அதன் தலைவர் பேராசிரியர் ஆரியபால மறுத்துள்ளார்.

காங்கிரஸின் விதிகளில் மாற்றங்கள் செய்வது பற்றி அதன் விசேட குழுவொன்றே பரிசீலித்து சிபார்சுகளை வழங்குமென்றும் அவ்வாறு சிபார்சு செய்யப்பட்ட மாற்றங்கள் ஜூலை பன்னிரெண்டாம் திகதி நடைபெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டில் அரசியல் தொடர்புடையவர்கள் கட்சிப் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட முடியாது எனக் கூறும் பிரிவொன்று அமைப்பு விதிகளில் சேர்க்கப்பட்டது. அந்தப் பிரிவை ரத்துச் செய்யும் ஆலோசனை பொன்று ஜூலை பன்னிரெண்டாம் திகதி நடைபெறும் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும். இதற்கிடையில் தமக்கு இவ்விடயத்தில் எவ்வித சம்பந்தமும் இல்லையென லலித் அத்துலத் முதலியும் அறிவித்துள்ளார்.

## ஷெல் தாக்கு

பலவேகய படையினர்பலவ இத்தாவில்பகுதிகளை நோக்கி நேற்றுப்பகல் கடும்ஷெல் தாக்குதல்களை நடத்தினர். 51

## குமண கப்பல் தீவகம் சென்றது

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வந்த குமண கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிவிட்டு நேற்று நண்பகல் தீவுப் பகுதிக்குச் சென்றுள்ளது.

இக்கப்பலில் தீவுப்பகுதிக்கான உணவுப்பொருள்களும் தபால்களும் சென்றுள்ளதாக தெரியவருகிறது. 06

## நெய்தல் வெளியீட்டு விழா

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய நெய்தல் பாடல் ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழா இன்றுமாலை 4மணிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரி மண்டபம் அரங்கில் நடைபெறுகின்றது.

இவ்விழாவின் சிறப்பம்சமாக சங்கீதபூஷணம் திரு. பொன். சுந்தரலிங்கத்தின் தமிழீழத் தாயகப் பாடல்களை உள்ளடக்கிய இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

## திரிபோஸ மா வந்தது

யாழ் சுகாதார திணைக்களத்திற்கு 'குமண'' கப்பலில் 500 பக்கற் திரிபோஷமா வந்து சேர்ந்துள்ளது. கடந்த ஒரு வருட காலத்திற்கு மேலாக இங்கு திரிபோஷ மா அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 13

## ஜனாதிபதியும் பங்குபற்றுவார்

கடந்த ஞாயிறன்று வை 8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டபோது பலியான 19 விமானப் படையினரின் மரணம் தொடர்பான சமய நிகழ்ச்சியில் ஜனாதிபதி பிரேமதாஸ திருமதி ஹேமா பிரேமதாஸ, முப்படை தளபதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று மாலை ஹூனுப்பிட்டி விஹாரையில் இவ் வைபவம் இடம்பெறவுள்ளது.

## நேற்றைய மோதலில் 17 போராளிகள் வீரச்சாவு

நேற்று காலை தொடக்கம் கொம்படி வடியடிப் பகுதியில் நிலை கொண்ட பெருந்தொகையான ஸ்ரீலங்கா படையினர் கொம்படி இயக்கச்சி வீதியின் இரு பக்க முனைகளாலும் கவசவாகனங்கள், பீரங்கி வண்டிகள் சகிதம் முன்னேறும் முயற்சியில் தாக்குதல் மேற் கொண்டுள்ளனர். இப்படையினருக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிகப்டர்களும் தாக்குதல் மேற்கொண்டுள்ளன. இந்நிலையில் புலிகள் படையினரை எதிர்த்து கடும் தாக்குதல் தொடுத்துள்ளனர்.

இந்த உக்கிரமான சண்டையில் ஈழவேந்தன். பாலசுந்தரம், சதீஸ் அளவெட்டி) லெப் விமல் (ரவீந்திராதேவி தங்கராசா புத்தூர்) 2 ஆம் லெப் சேர்ணா, வசந்தரூபி திலையம்பலம் பொம்மை வெளி அராலிவீதி லெப் வதனி பவானி சின்னன் மல்லாவி. செழியன், (சந்திரன் - குமணன் வல்வெட்டித்துறை) தமிழ் மாறன் (நெவிநாதன் - விவேகானந்தன், வட்டுக்கோட்டை), குமரவேல் (சிவப்பிரகாசம் - பிரபசிவன் மல்லாகம்), நகைமுகன், அருணகிரி-சற்குணராசா வேலணை 4 ஆம் ஒழுங்கை பிறவுன் வீதி) புலவன பொன்னையா மதியழகன் திமில தீவு மட்டக்களப்பு), ஆதவன் (குகன் திருமாறன் வல்வெட்டித்துறை) சொக்கன் (கிறிஸ்டி ராஜகுமார் ஆலடிச்சந்தி. நல்லூர்) அன்பழகன் (கோபாலர் லிங்கேஸ்வரன் நல்லூர்.) சத்தியவான் (அலோசியஸ) சுந்தரலிங்கம் மோகனதாஸ தொண்டமனாறு, ஜெகதீசன் (அருணம்பலம் இருபாரன் திருகோணமலை), லெப். சேந்தன் (பரம்சோதி நிரஞ்சன் அல்வாய்). அறிவொளி (வர்ணன்) (தம்பலிங்கம் சிவதாசன் அளவெட்டி), இளையவன் (அந்தோனி பிள்ளை செல்வக்குமார் கைதடிவடக்கு

## மக்கள் அஞ்சலிக்கு

மாவீரர்களது புகழுடல்கள் மருதனாமடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திலுள்ள புனித புதைகுழிகளில் விதைக்கப்படும்.

வடமராட்சிப் பிரிவிலும் தென்மராட்சிப் பிரிவிலும் அவ்வப் பிரிவிலுள்ள மாவீரர்களது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக ஓர் பொது இடத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம் மாவீரர்களது புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாவீரர் துயிலுமில்லத்திலுள்ள புனித புதைகுழிகளில் விதைக்கப்படும்.

## பளைப்பகுதி அகதிகளுக்கு யாழ். செயலகமே நிவாரணம்

பலவேகய இராணுவ நடவடிக்கையால் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் விவரங்கள் யாழ். செயலகத்துக்கு கிடைக்கவில்லையென யாழ் அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிளிநொச்சி அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதாகவும் தற்போதைய நிலையில் யாழ் செயலகமே அப்பகுதி மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஆனையிறவு இராணுவ நடவடிக்கையினாலும் இப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை விட தற்போதைய இராணுவ நடவடிக்கையினால மேலும பலர் இடம்பெயர்ந்து தென்மராட்சி மற்றும் குடாநாட்டின் ஏனைய பகுதியிலும் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47

## அவுஸ்திரேலிய புலமைப்பரிசில் யாழ். மாணவர் நிராகரிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து அவுஸ்திரேலிய புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பித்த பலரின் விண்ணப்பங்கள் பெரும்பான்மையானவை நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு தகைமைகள் போதாது என காரணம் காட்டப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்திலேயே கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவரின் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டுள்ளது. 22

## 9 இராமேஸ்வர மீனவர்கள் கரை திரும்பவில்லை என அறிவிப்பு

இராமேஸ்வரத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒன்பது தமிழக மீனவர்களைக் காணவில்லையென இராமேஸ்வரம் மீனவர் சங்கம் அறிவித்துள்ளது.

இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுமாறு இச்சங்கம் தமிழக அரசையும். இந்திய மத்திய அரசையும் கோரியுள்ளது.

இவர்கள் இலங்கைக் கடற்படையினரிடம் சிக்கியிருக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி வெளியீட்டாளர் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்ஸ்மி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 10-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது